# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண்376/2009

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2021 ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 22.01.2021**

**பெயர் - ஜெயராமன்**

**த/பெ - மதுரை**

**வயது -**

**சாட்சி - DW2**

**விசாரணை தொடங்கும் நேரம் -12.28pm**

**முதல் விசாரணை -**

நான் இவ்வழக்கின் பிரதிவாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமாணபத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். 15.04.2015 தேதியிட்ட கூடுதல் தலைமை செயலரரின் உத்தரவின் நகல் நகல் என்ற காரணத்தினால் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் பி சா ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.03.2017 தேதியிட்ட இந்து சமய அறநிலைய துறை அலுவலரின் கடிதத்தின் நகல் இரு ஆவணங்களும் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்ற ஆட்சேபனையுடன் பிசா ஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

வழக்கு சொத்து பொன்னேரி நெய்தவாயல் கிராமத்தை சார்ந்தது. வழக்கு சொத்தின் சர்வே எண் 781. அதன் மொத்த விஸ்தீரணம் 7 ஏக்கர் 15 சென்ட். அதில் ஒரு பகுதியான 352 சதுர அடிகளுக்கு சின்ன கௌத்தி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு

நெய்தவாயல் தண்ணீர் பந்தல் தர்மத்தின் தர்மகர்த்தா மோகன செட்டியார் தாக்கல் செய்துள்ளார் என்றால் மீஞ்சூர் வரதராஜ கோவிலுக்கு சொந்தமான இடம். மேற்படி சொத்தில் சின்ன கௌத்தி வீடுகட்டியுள்ளார். பல வீடுகள் உள்ளது அதில் இருவரும் வீடு கட்டியுள்ளார். அதே தண்ணீர் பந்தல் அறக்கட்டளைக்கு சொந்தமான இடத்தில் தான் நான் குடியிருந்து வருகிறேன். மோகன சுந்தர செட்டியாருக்கு அடிமனை வாடகையாக மாதம் ரூபாய் 50 கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. தண்ணீர் பந்தல் அறக்கட்டளையின் மூலம் வீடு கட்டிய அனைவரும் அவரவர் சொந்த செலவில் தான் வீடு கட்டினர். சின்ன கௌத்தி அவர் தாத்தா காலத்தில் இருந்தே வீடு கட்டி வசித்து வருகிறார். தண்ணீர் பந்தலுக்கு சொந்தமான சொத்தில் சொத்தின் உரிமையாளரிடம் அனுமதி பெற்று வீடுகட்டினார்களா என்றால் இல்லை. வீடு கட்டியவர்கள் வீட்டிற்கு மின் இணைப்பும் பெற்றுள்ளனர். மின்சார இணைப்பு சொத்தின் உரிமையாளரின் அனுமதி இல்லாமல் முறைகேடாக பெற்றுள்ளனர் என்றால் சரியல்ல. வாதி இதே நீதிமன்றத்தில் தண்ணீர் பந்தல் சொந்தமான சொத்துகள் குறித்து 18 வழக்குகள் தாக்கல் செய்துள்ளார். அனைத்து வழக்குகளிலும் சொத்துக்களை காலி செய்து சுவாதீனத்தை ஒப்படைக்க கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 18 வழக்கில் என் பெயரில் அசல் வழக்கு எண் 186/2009 தாக்கல் ஆகி உள்ளது. மேற்படி வழக்கு தான் முதலில் தீர்ப்பானது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி தீர்ப்பிற்கு சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு எண் 38/2013 தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. இதே நீதிமன்றத்தில் அறக்கட்டளை சொந்தமான மற்ற வழக்குகள் ஒரு தலை பட்சமாக தீர்ப்பானது. ஒரு தலைபட்ச தீர்ப்பை ரத்து செய்ய மனு ஏதேனும் தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை. 1912ல் செட்டில் மென்ட் ஆவணத்தின் படி வழக்கு சொத்து வாதியின் தண்ணீர் பந்தலுக்கு சொந்தமான சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் மீஞ்சூர் வரதஜார பொருமால் கோவிலுக்கு சொந்தமான சொத்து. 100 குடும்பங்கள் குடியிருந்து வருவதாக கூறிய நிலையில் பட்டா வாங்கப்பட்டதா என்றால் இல்லை. நான் கோவில் இடம் என்று கூறிய நிலையில் கோவிலிடம் அனுமதி பெற்றதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாக என் பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. பிசா ஆ 14, 15 ல் இந்து சமய அறநிலைக்கு சொந்தமான சொத்து என்று குறிப்பிட்டு கூறவில்லை. இந்து அறநிலைய சொத்திற்கு சொந்தமான சொத்து என்றால் தங்களை வழக்கில் தரப்பினராக சேர்க்க

முயற்சி செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி மற்றும் அனைவரும் சட்டவிரோதமாக வழக்கு சொத்தில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதிக்கு பௌவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி 800சதுர அடியில் தளம் போட்ட வீடு கட்டி இரு குடிசை வீடு கட்டியதாக கூறியுள்ளேன். வழக்கு சொத்தை காட்டிலும் அதிக விஸ்தீரணம் காட்டியுள்ளேன் என்றால் அளந்து பார்த்து கூறியுள்ளேன்.

**விசாரணை முடியும் நேரம் -12.54pm**